# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை பொலிஸ்

### உப பொலிஸ் பரிசோதகர் (ஆண்) பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் நிலவும் பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர் (ஆண்) பதவிவெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழே காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து, பணிப்பாளர், ஆட்சேர்ப்பு, பயிலுநர் ஆட்சேர்ப்புப் பகுதி, இல. 375, 01 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை கொழும்பு - 06 எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு, 2025.07.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என்பதுடன், இலங்கைப் பொலிஸால் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படவும் மாட்டாது.

விண்ணப்பங்கள் பெறப்பட்ட வரிசைப்படி நேர்முக பரீட்சைகள் நடத்தப்படும்.

பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின் இந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்தாகும்.

03. **சம்பள அளவுத் திட்டம் (மாதாந்தம்)** :

ரூபா 55,410 - 7 x 670 - 2 x 890 – 25 x 1,190 - ரூபா 91,630.00

10/2025 ஆம் இலக்க பொ. நி. சுற்றறக்கையின் படி இச்சம்பள அளவுத்திட்டம் கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ் உத்தியோகத்தர்களிற்கு 2022.12.15 ஆம் திகதிய CRTM 260 RTM 385 ஆம் இலக்க இலங்கை பொலிஸ் அறிவித்தல்களின் கீழ் வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்களாவர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக இங்கு கீழ்க் காட்டப்பட்ட கொடுப்பனவுகளும் இவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

| | | | |
|---|---|---|---|
| (அ) | வாழ்வாதாரக் கொடுப்பனவு :- | - ரூபா | 17,800.00 |
| (ஆ) | 10/2025 ஆம் இலக்க அ. பொ. நி. சுற்றறிக்கையின் படி விசேட கொடுப்பனவு (அடிப்படை சம்பளத்தில் 22% வீதத்துடன் ரூபா 1,250) | | |
| (இ) | கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு | - ரூபா | 2,000.00 |
| (ஈ) | சீருடைகளை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு | - ரூபா | 250.00 |
| (உ) | உணவு மற்றும் தங்குமிடம் கொடுப்பனவு | - ரூபா | 31,800.00 |
| (ஊ) | சேவை காலத்திற்கேற்ப ஏனைய கொடுப்பனவுகள் | | |

இக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக

(அ) போக்குவரத்து வசதிகள்

(ஆ) உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ வசதிகள் (வெளிநாடுகளிலாயினும் சிகிச்சை பெற நிதி உதவி பெற்றுக்கொள்ள முடியும்)

(இ) சீருடை

(ஈ) தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளை தொடர சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

(உ) உத்தியோகத்தர்களது விளையாட்டுத் திறன் மற்றும் ஏனைய திறமைகளை விருத்தி செய்வதற்கான வசதிகள்

(ஊ) கடமை நிமித்தமான பிரயாணச் செலவுகளும் கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு மற்றும் சிறந்த கடமை நிமித்தம் வழங்கப்படுகின்ற வெகுமதிகள் சார்பில் பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து நிதிகளும் வழங்கப்படும்.

04. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

4.1 **வயதெல்லை** :

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18-26 வயதுக்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் ஏற்கனவே இலங்கை பொலிஸ் சேவையில் கடமையாற்றும், விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 28 வயதுக்கு உட்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

4.2 **கல்வித் தகைமைகள்** :

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம் மற்றும் போதனா மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் விண்ணப்பதாரி ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அத்துடன்,

க. பொ. த. (உ./த.)பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். (பொதுச் சாதாரணப் பரீட்சையைத் தவிர)

***குறிப்பு 01*** *இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின் படி பாட எண் 41, 44 விஞ்ஞான பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும், பாட எண் 42 மற்றும் 45 கணிதப் பாடங்கள் சோடி ஒரு பாடமாகவும் கொள்ளப்பட்டு, பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.*

***குறிப்பு 02*** *க.பொ.த. (சா./த.) பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது அப்பாடத்தில் செயன்முறைப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பின், அப்பாடத்தில் சித்தி அடையவில்லை என்றே கருதப்படும்.*

***குறிப்பு 03*** *விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள், க.பொ.த.(சா./த.) பரீட்சை பாடத்திட்டத்தில் அடங்குவதில்லை என்பதால், அப்பாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் க.பொ.த (சா./த.) பரீட்சையில் சித்தியடைந்ததாகக் கருதப்படமாட்டாது.*

4.3 **உடற்த் தகைமைகள் :**

- உயரம் 05 அடி 06 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். (சென்றிமீட்டர் 167.64)
- மார்பளவு 32 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும். (சென்றிமீட்டர் 81.28) குறைந்தது மூச்சு விட்ட நிலையில்

4.3.1 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலேனும் கடமையாற்றவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் போதிய உடல், உள தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

4.3.2 **கட்புல தேவைப்பாடு** - மூக்குக் கண்ணாடி அல்லது வில்லை இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தளவு பார்வை 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும் போது மற்றக் கண்ணின் பார்வை 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.3.3 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருந்தாத மற்றும் கடமைக்குத் தடையான வகையில் செயற்கை முறையில் உடலுறுப்புக்கள் மாற்றப்பட்டு இருத்தல் கூடாது.

4.4 **பிற தகைமைகள் :**

4.4.1 இலங்கைப் பிரைசையாகவிருத்தல் வேண்டும்.

4.4.2 விண்ணப்பதாரி கெட்ட நடத்தையுடையவரல்லாமல், சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

4.4.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் மற்றும் திருமணமாகாது பிள்ளைகள் இருப்பவர்கள் திருமணமாகாதவர்களாக கருதப்படமாட்டார்கள்.)

4.4.4 தீவின் எப்பாகேத்திலும் கடமையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

4.4.5 பதவிக்கு ஆட்சேர்ப்புத் செய்யப்படுவதற்குத் தேவையான 4:1 மற்றும் 4:2 பந்திகளில் காட்டப்படுகின்ற தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூர்த்தி செய்திருத் தல் வேண்டும் என்பதுடன், பந்தி 4:4 இல் காட்டப்பட்டுள்ள தகைமைகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற திகதியில் அவ்வாறே இருத்தல் வேண்டும்.

05. **ஆரம்ப பரீட்சை** :

விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுள் இருந்து அடிப்படைத் தகைமைகளையும் வயதெல்லையையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் ஆரம்பப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப் பரீட்சையின் போது மேற்குறித்த பந்தி 4:1, 4.2 மற்றும் 4.3 இல் விபரிக்கப்பட்டுள்ள ( 4:3:1 மற்றும் 4:3:2 தவிர்ந்த ) தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

ஆரம்பப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படுகின்ற சபையினால் நடாத்தப்படும் உடற்றகுதிப் பரிசோதனைக்குத் தோற்றும் வேளையில், அதற்கு முகம் கொடுக்கத் தகுதியானவர்கள் என, அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் படிவத்தை, இலங்கை வைத்திய சபையில் பதிவு பெற்ற வைத்தியரொருவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| *செயற்பாடு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| ஓட்ட தூரம் / Run meters 1000 மீற்றர் | 03 நிமிடங்களிற்கு குறைவாயின் | 30 |
| | 03-04 நிமிடங்களிற்கிடையில் | 20 |
| | 04-05 நிமிடங்களிற்கிடையில் | 10 |
| Chinup (05 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 03 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Situp (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Kim Gem (ஞாபக சக்தியை பரிசோதித்தல் | தேர்வுசெய்த வகைச் செயற்பாட்டை அவதானிப்பதற்கு 30 நொடிகள், ஞாபக சக்திக்கு 30 நொடிகள் எழுத்துக்கு 120 நொடிகள் | ஒரு செயலிற்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 10 புள்ளிகள் |

*குறிப்பு : 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர்.*

06. **எழுத்துப் பரீட்சை** : ஆரம்ப பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சை கீழ் வரும் பாடங்களில் இடம் பெறும்.

| *பாடங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகளின்* | *காலம்* | *சித்தியடையத் தேவையான புள்ளி விகிதம்* |
|---|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித் தேர்ச்சி | 40 | 45 நிமிடம் | 40% |
| 02. பொது அறிவும் நுண்ணறிவும் | 60 | 01 மணித்தியாலம் | |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**.- ஆரம்ப பரீட்சையிலும் எழுத்துப் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணபதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *தேர்ந்தெடுப்பதற்காக கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித்தகைமைகள் | 20 | ஏற்புடையதாகாது |
| 2. மொழி ஆற்றல் | 10 | |
| 3. கணினி அறிவு/ பிற | 10 | |
| 4. விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| 5. தலைமைத்துவம்/ பொதுச் சேவைகள் | 20 | |
| 6. நேர்முகப் பரீட்சை சபையின் மதிப்பீடு | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை** :

எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளைக் கூட்டி, விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை இறங்கு வரிசைப்படி பட்டியலிட்டு பட்டியல் தயாரிக்கப்படும். அப்புள்ளிகளின் ஒழுங்கு வரிசைக்கு அமைய வெற்றிடங்கள் எண்ணிக்கையைப் போன்று 125% விண்ணப்பதாரிகள் பின்புலப் பரீட்சைக்கும் மருத்துவ பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

*குறிப்பு* : மேற்படி ஆட்சேர்ப்பு நடைமுறைக்குப் புறம்பாக தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில் சிறப்பான விளையாட்டுத் திறமையினைக் கொண்டுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான திறமையினை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் மற்றும் மார்பளவு சம்பந்தமான தகைமைகளை கவனத்திற்கொள்ளாது, ஏனைய தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பின் நியமன அதிகாரியின் தற்றுணிபின் படி ஆட்சேர்ப்பு செய்ய முடியும்.

09. **பின்புலப் பரீட்சை :**

9.1 எழுத்துப் பரீட்சையிலும், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை இறங்கு வரிசைப்படி பட்டியலிட்டு, அப்புள்ளிகளின் ஒழுங்கு வரிசைக்கு அமையவும் நிலவும் வெற்றிடங்கள் எண்ணிக்கைக்கு அமையவும் விண்ணப்பதாரிகளுக்கு ஏதேனும் பாதகமான பதிவுகள் உண்டா என்பது பற்றி பின்புலப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

9.2 இங்கு விண்ணப்பதாரியின் நடத்தை சம்பந்தமாக அறிந்துகொள்ளும் பொருட்டு, விண்ணப்பதாரியினதும் அவருடைய நெருங்கிய உளவினர்களினதும், அவர் நெருங்கிப் பழகுபவர்களினதும் நடத்தை மற்றும் அவர்கள் எப்படியானவர்கள் என்பது சம்பந்தமாக விசாரிக்கப்படும் என்பதுடன், மோசமான பின்புலப் பதிவுகளை உடைய வீணணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட மாட்டார்கள்.

9.3 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குவதானது, அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தகுதியற்றவராகின்றனர். பொய்யான தகவல்களை வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சேர்ப்பின் பின் தெரிய வந்தால். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு அல்லது பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

***குறிப்பு***.- நடைமுறை விதிகளின் 59 ஆம் பிரிவிலும், தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையில் 7:2:4:5:2 பிரிவுகளினதும் மற்றும் பொலிஸ் மா அதிபரின் 2014/ 2007 ஆம் இலக்க சுற்றறிக்கையிலும் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக, நீங்கள் பொய்யான தகவல்களை வழங்கி பொலிஸ் சேவையில் இணைந்துள்ளதாகத் தெரியவந்தால், உங்களது நியமனத்தை இரத்துச் செய்வது சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு நீங்கள் உடன்படல் வேண்டும்.

10. **மருத்துவப் பரிசோதனை** :

மோசமான பின்புல அறிக்கை இல்லாத விண்ணப்பதாரிகள் மாத்திரமே மருத்துவ பரிசோதனைக்கு அழைக்கப்படுவர். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பொலிஸ் வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரி உள்ளிட்ட மருத்துவ சபையினால் நடாத்தப்படும் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். இங்கு விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைக்கு தகுதியானவரென, உடல், உள ஆரோக்கியம் சம்பந்தமான மருத்துவ பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். மருத்துவ பரிசோதனைக்கு ஒரு தடவை மட்டுமே உட்படுத்தப்படுவர். மருத்துவ பரிசோதனை சுகாதாரம் 169 படித்திற்கமைய மேற்கொள்ளப்படும். மருத்துவ சபையினால் நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்ய முடியாது.

11. **பயிற்சி :**

11.1 மேற்படி பரீட்சைகள் அனைத்திலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள் மட்டுமே நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படுகின்ற தினத்தில் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் வழங்கப்படும் என்பதுடன், அதன் பின்னர் பயிலுனர் சேவைப் பயிற்சிக் காலம் நிறைவடையும் வரை வெளிக்களப் பயிற்சி வழங்கப்படும்.

11.2 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனம் இரத்துச் செய்தல் என்பன தொடர்பாக நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

12. **பதவியின் தன்மை.-** நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். (ஓய்வூதிய முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.)

13. **சேவை நிபந்தனைகள் :**

13.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் கீழ் குறித்த 13 : 3 பிரிவிற்கு உட்பட்டு மூன்று (03) வருடகால பயிலுனர் சேவைக்காலத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அரச கரும மொழிக் கொள்கையை அமுல் செய்யும் வகையில், தற்போது அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் வகுக்கப்படும் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுதல் வேண்டும்.

13.3 பொதுச் சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள், தேசிய பொலிஸ் ஆணைக்குழு சுற்றறிக்கைகள், தாபன விதிக் கோவை ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறைசேரி சுற்றறிக்கைகள், இலங்கைப் பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல்கள், பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைகள், பொலிஸ் ஆலோசனை நடவடிக்கை முறை ஒழுங்குவிதிகள் மற்றும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்னைகள் என்பவற்றிற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

13.4 பயிலுநர் சேவைக்காலமானது நியமனத் திகதியிலிருந்து முதல் 03 வருடங்கள் வலுவில் இருப்பதுடன், அக்காலப் பகுதியில் உத்தியோகத்தர்களுக்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. பொலிஸ் சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கமைய மட்டுமே திருமணம் முடிக்க முடியும். இந்த ஒழுங்குவிதிகள் மீறப்படும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

13.5 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நிறைவின் பின்னர் 05 வருடங்கள் கட்டாய சேவையினை மேற்கொள்ளல் வேண்டும். இந்த கட்டாய சேவைக் காலம் நிறைவடைய முன்னர் எவரேனும் உத்தியோகத்தரொருவர் பதவியிலிருந்து விலகுவதற்கு (இராஜினாமாச் செய்வதற்கு) எண்ணுவாராயின், அவருக்கான பயிற்சிகள் மற்றும் சீருடை உள்ளிட்ட ஏனைய செலவுகளுக்காக தீர்மானிக்கப்படும் தொகை முழுவதையும், விலகிச் செல்வதற்கான கடிதத்தினை கையளிக்கும் போதே செலுத்துவதற்கு விருப்பத்தை தெரிவிக்கும் ஒப்பந்தமொன்றுக்கு வருதல் வேண்டும். விலகிச் செல்வது சம்பந்தமாக, தாபன விதிக்கேவை/ நடவடிக்கை முறை விதிகள், தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13.6 நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஒவ்வொரு உத்தியோகத்தரும், பொலிஸ் சேவையில் முதல் தடவையாக இணைத்துக் கொள்ளப்படும் போது, தன்னிடமிருக்கும் சொந்தச் சொத்துக்கள் அல்லது தமது பெயரில் எழுதப்பட்ட அல்லது சட்டரீதியாக உரித்தாக்கப்பட்ட எல்லாவிதமான சொத்துக்கள் சம்பந்தமாகவும், தமக்குள்ள எல்லா பொறுப்புக்கள் சம்பந்தமாகவும் அனைத்து விபரங்களையும் தனது தனிப்பட்ட கோவையில் உள்வாங்கும் பொருட்டு (திருத்தப்பட்ட) 261 ஆம் இலக்க பொதுப் படிவத்தைப் பூர்த்தி செய்து பொலிஸ் மா அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

உத்தியோகத்தர் திருமணம் முடித்தவுடன் மேற்கூறப்பட்ட விபரங்களை, தமது வாழ்க்கைத் துணை சம்பந்தமாகவும் உள்ளடக்கி சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலே விபரிக்கப்பட்டவாறு புதிய உரித்தொன்று அல்லது சொத்தொன்று எடுத்துக்கொள்ளப்பட்டால் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட உரித்து அல்லது சொத்து சம்பந்தமாகவும் முழுமையான விபரங்களை, தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்கும் பொருட்டு ஒவ்வொரு உத்தியோகத்தரும் எழுத்து மூலம் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்தல் வேண்டும்.

13.7 தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் படி செயற்படுவதாக உறுதியளித்து சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

14. பதவியில் நிரந்தரமாக்கல்.- நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் 03 வருட கால தகுதிகாண் காலத்தில் மாதாந்தம் பேணப்படுகின்ற முன்னேற்ற கோவையொன்றை 33 மாதங்கள் பேணிச் செல்லல் வேண்டும். தகுதிகாண் கால முடிவில் அவ் உத்தியோகத்தர்களின் பதவி நியமன அதிகாரியினால் நிரந்தரமாக்கப்படும். மேலும், தகுதிகாண் காலத்தில் உரிய முன்னேற்ற கோவை பூர்த்தி செய்யத் தவறும் உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு, முன்னேற்ற கோவை பூர்த்தி செய்வதற்குச் செலவாகும். மேலதிக காலத்தின் அடிப்படையில் நடைமுறை விதிகளின் படி தீர்மானிக்கப்பட்டு, நியமன அதிகாரியினால் அவ் உத்தியோகத்தர்களின் பதவி நிரந்தரமாக்கப்படும்.

எவ்வாறெனினும், நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற மேலதிக 03 வருட காலத்திற்குள் முன்னேற்ற கோவை பூர்த்தி செய்யத் தவறும் உத்தியோகத்தர்களின் நியமனத்தை நிரந்தரமாக்குவது அல்லது தகுதிகாண் காலத்தை நீடிப்பது சம்பந்தமாக நியமன அதிகாரி தீர்மானித்தாலன்றி அவ் உத்தியோகத்தர்களின் நியமனம் முடிவுறுத்தப்படும்.

15. வினைத்திறன்காண் தடைப்பரீட்சை :

வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வருமாற நடைமுறைப்படுத்தப்படும்.

| *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் விபரம்* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் எத்தனை வருடங்களுக்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும் என்பது* | *வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் தன்மை எழுத்து பரீட்சை/ தொழிற்றுறை பரீட்சை/ சன்றிதழ் பாடநெறி / வேறு* |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையில் நிரந்தர மாக்குவதற்கான பரீட்சை) | உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய் மொழி |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு நியமிக் கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்தும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பயின்று முடித்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கு பழக்கப்படுத்தும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பயின்று முடித்தல் |

16. **மொழித்தேர்ச்சி :**

| *மொழி* | *பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| மற்றைய அரசகரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதற்கு துணையான சுற்றறிக்கையின் படி உரிய மட்டத்திலான திறனை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைந்த உத்தி யோகத்தர்கள் உரிய அரசகரும மொழித்திறனை தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

17. இந்த வர்த்தமானியின் I ஆவது பகுதி (II அ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளுக்கு நியமித்தல் சம்பந்தமான பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

18. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைந்து அனுப்புதல் வேண்டும். (மூலப் பிரதிகளை சமர்ப்பித்தலாகாது.)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்பிரதி ;
(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்.

19. (அ) ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள், அவர்களது விண்ணப்பத்தை உரிய நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரை விடுவிக்க முடியுமென அத்தாட்சிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தினை A4 அளவிலான தாளில், தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி, உரிய உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்ப் பிரதிகளுடன், மேலே இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன், எக்காரணம் கொண்டும் தமது விண்ணப்பத்தினை எவரேனும் உத்தியோகத்தரிடம் தனிப்பட்ட ரீதியில் கையளித்தலாகாது.

20. இந்த அறிவித்தலில் காட்டப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லா வகையிலும் உறுதிப்படுத்தப்படாத விண்ணப்பங்களும், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

குறிப்பு.- பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவு அல்லது ஏனைய செலவுகள் எதுவும் செலுத்தப்படமாட்டாது.

பிரியந்த வீரசூரிய,
பதில் கடமை பொலிஸ் மா அதிபர்.